**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.238/2023

பெயர் :பாப்பாத்தி (PW2) (Cross )

த/க/பெ. :

தேதி : 26.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா எ ன்றால் இல்லை. வாதி என்னை நீதிமன்றம் அழைத்து வந்தார்எ ன்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸதீரணம் நான்கெல்லை விவரங்கள் எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதிகளின் தாயார் முத்துலெட்சுமி எந்த தேதியில் இறந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது போல் அவர்கள் தந்தை எந்த தேதியில் இறந்தார் என்பதும் எனக்கும் தெரியாது என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் மற்றும் அவரது தந்தை வெளிநாடு சென்று எவ்வவு சம்பாதித்தார்கள் என்ற விபரம் தெரியாது. தாவா சொத்தை தவிர்த்து வாதி குடும்பத்தில் வேறு சொத்து உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. நானும் வாதியும் ஒரே சமூகம்என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் வெளிநாட்டில் எவ்வளவு காலம் பணிபுரிந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கு எதிர்புறம் தான் வாதி குடியிருந்தார் என்றால் சரிதான். 4, 5 ஆண்டுகளாக தான் அங்கு வாதி குடியிருக்கிறார். அந்த சொத்தை 2001 ல் வாதிக்கு அவரது தந்தை தான் எழுதி வைத்தார் என்றால் அந்த விபரம் தெரியாது. 2001 ல் முதல் வாதி அந்த சொத்தில் குடியிருக்கிறர் என்ற ஆவணம்போட்டுள்ளார் என்றால் அது குறித்து தெரியவில்லை. பிரதிவாதி மோகன் தாவாசொத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சுமார் 30 ஆண்டுகளாக அவர் அங்கு குடியிருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர வேறு சொத்து பிரதிவாதிக்கு உள்ளதா என்பது தெரியாது. எனக்கு சொந்த ஊர் திருமுல்லைவாசல் என்றால் சரிதான். வாதியின் தாயார் முத்துலெட்சுமி அம்மாள் 2ம் பிரதிவாதிக்கு தாவாசொத்தை 30 ஆணடுகளுக்கு முன்பு வாய்மொழியாக கொடுத்துளளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. என் நிருபண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தை பிரித்துக் கொடுக்குமாறு வாதி பிரதிவாதிகளிடம் கேட்டதாக சொல்லி உள்ளேன் அது எந்த தேதி மாதம் என்பது தெரியாது. எந்த தேதியில் பிரதிவாதிகள் சொத்தில் இருந்த

ஓட்டுவீட்டை இடித்து தரைமட்டமாக்கினார்கள் என்பதை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதி 2ம்பிரதிவாதியிடம் எவ்வித பாகமும் கேட்கவில்லை என்றாலும் 2ம் பிரதிவாதி சொத்தில் 30 ஆண்டுகளாக குடியிருக்கிறார் என்றாலும் சரியல்ல. நானும் வாதியும் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதி என் நெருங்கிய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் செல்லி உள்ள விபரங்கள் வழக்கிற்காக பொய்யாக சொன்னவை என்றால் சரியல்ல.